செ.வெ.எண்.947/2017 நாள்:15.12.2017

# சேலம் மாவட்டத்தில் தட்கல் முறையில் விவசாயிகளுக்கு விரைவான மின் இணைப்பு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

சேலம் மாவட்டத்தில் தமிழக அரசால் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மூலம் தட்கல் முறையில் விவசாயிகளுக்கு விரைவான மின் இணைப்பு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கைத்தறி, விசைத்தறி, வீட்டு மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரத்திட்டத்தின் மூலம் 23.07.2016 முதல் அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கும் 100 யூனிட்டுகள் வரையும், அனைத்து கைத்தறி மின் இணைப்புகளுக்கும் 200 யூனிட்டுகள் வரையும், அனைத்து விசைத்தறி மின் இணைப்புகளுக்கும் 750 யூனிட்டுகள் வரையும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

வீடு மற்றும் வணிக மின் இணைப்புகள் கோரும் கட்டிடங்கள், கம்பத்திலிருந்து 100 அடி தூரத்திற்குள் இருக்கும் பட்சத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் தவிர்த்து காலை 10 மணிக்குள் விண்ணப்பம் அளித்தால், ஒரு நாளைக்குள் மின் இணைப்பு வழங்கும் திட்டம் 01.07.2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்படி மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. 15 நாட்களில் தொழிற்சாலை மின் இணைப்பு புதிய தொழிற்சாலைகளுக்கு 112 KW வரை மற்றும் கூடுதல் மின்பளு கோரும் விண்ணப்பதார்களுக்கு ஏற்கனவே உள்ள மின்மாற்றியிலிருந்து மின் இணைப்பு வழங்குவதாக இருக்கும் பட்சத்தில், 15 தினங்களுக்குள் மின் இணைப்பு வழங்கும் திட்டம் 15.07.2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்படி தொழில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்களை பிரிவு அலுவலகங்களில் நேரடியாகவும், www.tangedco.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம்.

தமிழக அரசால் தட்கல் முறையில் விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டம் புதிய விவசாய மின் இணைப்பு கோரி பதிவு செய்துள்ள விண்ணப்பதார்கள், விரைந்து மின் இணைப்பு பெறும் வகையில், விரைவு மின் இணைப்பு வழங்கும் திட்டம் 19.06.2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மின் இணைப்பு பெற, 5 குதிரை திறன் வரை உள்ள மின் மோட்டார்களுக்கு ரூ. 2,50,000, 7.5 குதிரை திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூ. 2,75,000, 10 குதிரை திறனுள்ள மின்மோட்டார்களுக்கு ரூ. 3,00,000 மற்றும் 15 குதிரை திறனுள்ள மின்மோட்டார்களுக்கு ரூ. 4,00,000 வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு ஆறு மாத காலத்திற்குள் இலவச மின் இணைப்பு வழங்கப்படும். இத்திட்டத்தில் மின் இணைப்பு பெற விரும்பும் விவசாய பெருமக்கள் தங்கள் பகுதியிலுள்ள செயற்பொறியாளர் இயக்குதல் மற்றும் பராமரித்தல் அவர்களிடம் விருப்ப மனுவினை அளிக்கலாம்.

ஈரோடு மண்டலத்தைச் சார்ந்த ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், பிரத்யேகமாக மின் வாரிய WhatsApp Help line, 9445851912 என்ற அலைபேசி எண்ணில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அலைபேசியில் பொதுமக்கள் தங்கள் பகுதியில் பாதுகாப்பில்லாமல் இருக்கும் உடைந்த, சாய்ந்த மின் கம்பங்கள், கதவு திறந்த நிலையில் உள்ள மின் பெட்டிகள், தாழ்வாக இருக்கும் மின் கம்பிகள் போன்ற தகவல்களை, படங்கள் மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ சம்பந்தப்பட்ட பகுதியின் தெளிவான விலாசத்துடன் தெரிவிக்க வேண்டும். பாதுகாப்பான மின் கட்டமைப்பை ஏற்படுத்துவதும், மின் விபத்துக்களை தடுப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

சேலம் மாநகராட்சி மற்றும் ஆத்தூர் நகராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட பகுதியினைச் சேர்ந்த பொதுமக்கள் மின்தடை பற்றிய புகார்களை 24 மணிநேரமும் இயங்கும், மின்தடை குறை தீர்க்கும் கணினி மையத்தில் உள்ள 0427–2414616, 1800–425–19122 கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம்.

மேலும், இது குறித்த விவரங்களுக்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், சேலம் மின்பகிர்மான வட்டம், காமராஜர் நகர் காலனி, சேலம்–14 என்ற முகவரிக்கும், 0427–2241357, 0427–2241359 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.